**ஜூலை - 4**

**"எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? - ஏசா 53 : 1.**

அந்த வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யும் இவ்விதமாக உபத்திரவம் கொடுப்பவர்களின் கவனத்தை இழுக்கவும், நீதியின் நிமித்தமாக உபத்திரவத்தை சகிக்கவும், உபத்திரவப்படுத்துகிறவர்களுக்கும், எல்லா மனிதருக்கும் சார்பாக பொறுமையிலும் சகோதர சிநேகிதத்திலும், இரக்கத்திலும், அன்பிலும் அதனால் (உபத்திரவத்தினால்) சரியானபடி அப்பியாசிக்கப்படவும், இக்காலத்தில் சபையின் அழைப்பு இருக்கிறது. ஆகவே பந்தயப்பொருள் காண்கிறவர்களும், நமது கர்த்தராகிய யேசு கிறிஸ்துவின் முகத்தில் பிரகாசிக்கிற தேவனுடைய மகிமையின் வெளிச்சத்தைப் பார்க்கிறவர்களாகிய எல்லோரும் பிதாவினுடைய நிபந்தனைகளுக்கும், அழைப்புக்கும், ஊழியத்திற்கும் உண்மையுள்ளவர்களாய் இருப்போமாக. இப்படிப்பட்டவர்கள் எல்லோரும் நாம் பெற்றிருக்கிற இந்த ஊழியத்தில் கவனம் செலுத்தவும் சோர்ந்து போகாமலிருப்போமாக. மனிதர் கேட்டாலும் அல்லது அவர்கள் தவிர்த்தாலும் அவர்கள் நம்மைப்பற்றி தீதாகப்பேசினாலும், அதைரியப்படாதிருங்கள். கர்த்தர் தனது சம்பத்தை சேர்த்துக் கொண்டிருக்கும்போது, சோதனையின் முடிவில் நமது நற்சாட்சி கர்த்தரிடத்திலேயே கொடுக்கப்படவிருக்கிறது என்பதை ஞாபகத்தில் வைப்போமாக. **- Z '99, 10 11 (R 2413)**

இருதயத்துக்கு மிகவும் அதிக சந்தோஷத்தைக் கொடுக்கிற செய்தியை தேவனுடைய ஜனங்கள் விழுந்துபோன ஏழைமனுக்குலத்துக்குக் கொண்டுவருகிறார்கள். அது அவர்களுடைய தேவைகளுக்குத் திட்டமாகப் பொருந்துகிற ஒரு செய்தியாகும். என்றாலும், அதை நன்மையும் உண்மையான இருதயங்களில் பெற்றுக்கொள்ளுகிறவர்கள் எவ்வளவு கொஞ்சப்பேராயிருக்கிறார்கள். தேவனின் ஞானமும் வல்லமையுமாக கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதே இந்தச் செய்தியின் மையமாயிருக்கிறது. ஆனால், இந்தச் செய்தியைப்பெற அவர்கள் தவறிப்போனதினாலே, உலகம் கிறிஸ்துவை யேகோவாவின் வல்லமையின் ஏஜெண்டாக அறிந்து கொள்ளக்கூடாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய அவிசுவாசத்தில் நாம் அதைரியப்படவும் கூடாது. ஏனென்றால், "அந்த இரகசியம்" இவ்வாறாக உலகத்தால் கருதப்படுகிறது. **- P '35, 102.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**யோவா 1:7,12; 12:38; ரோம 10:16,17; யோவா 7:5; 1கொரி 1:18,19,24; 2:8; 2கொரி 4:3,4; மத் 11:25; 13:13-15; 16:17; ரோம 1:16,17.**

**கோபுர வாசிப்பு : Z '05, 204 (R 3589).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் சாட்சி பகர்ந்தேனா? எந்தச் சந்தர்ப்பங்களில்? என்னுடைய சாட்சி எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்டது? என் மீதும் மற்றவர்கள் மீதும் அதன் விளைவு என்ன?**